1979 மார்ச் 9] [திரு. கே. கந்தசாமி]

அந்த அளவிற்கு நீங்கள் செய்ய வேண்டும். இதற்காக அரசு நான் சொன்ன கருத்துக்களைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன், வணக்கம்.

## (7) அறிக்கை அளித்தல்.

### விவசாயிகளுக்கான மின் சலுகைகள் குறித்து அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து பேரவை விதி 82 இன் கீழ் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் அவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, 7—3—1979 அன்று மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர்கள் கொண்டு வந்த விவசாயிகளுக்கான மின் துண்டிப்பு சம்பந்தமான ஒத்திவைப்புத் தீர்மான விவாதத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனைத்துக் கட்சியினரையும் விவசாய சங்க பிரதிநிதிகளையும் கலந்து ஆலோசிப்பதென அவைக்கு அறிவித்தார். அதற்கேற்ப நேற்றைய தினம் (8—3—1979) அனைத்துக் கட்சி பிரதிநிதிகளுடனும், விவசாய உச்ச மட்டக் குழுவின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடப் பெற்றது. அப்பொழுது மின் கட்டண பிரச்சினைகள் 10—5—1978 அன்று விவசாய சங்கப் பிரதிநிதிகளுடன் பேசிய பொழுதே முடிவெடுக்கப்பட்டது என்பதையும் கூட்டுறவுக் கடன், வட்டி, கொள்முதல் விலை போன்ற மற்ற பிரச்சினைகள் தான் உச்சமட்ட குழுவின் பரிந்துரைக்கு அனுப்பப்பட்டது என்றும் தெளிவாக்கப்பட்டது. 10—5—1978 அன்று விவசாய சங்க பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளின் அடிப்படையில் விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும் மின்சாரத்துக்கு யூனிட் 1-க்கு, 16 பைசா என்பதை, பெரு விவசாயிகளுக்கு 14 பைசா என்றும் சிறு விவசாயிகளுக்கு 12-பைசா என்றும், மீட்டர் வாடகையை 5 ரூபாயிலிருந்து 4 ரூபாயாக குறைத்தும் முடிவெடுக்கப்பட்டது. இம்முடிவை எல்லோரும் ஒரு மனதாக வரவேற்றனர் என்பதும் குறிப்பிடத் தக்கது. இந்த அடிப்படையில் உச்ச மட்டக் குழு பரிந்துரைக்கு அனுப்பப்பட்ட ஆய்வு வரம்பிலிருந்து மின் கட்டணம் பற்றிய கோரிக்கையும் அப்போதே நீக்கப்பட்டுவிட்டது.

அரசுக் கடன், கூட்டுறவுக் கடன் அவைகளின் மீதுள்ள வட்டி, அபராத வட்டி ஆகியவைகள் குறித்து உச்சமட்ட குழுவின் பரிந்துரை எதிர்பார்க்கப்படுகிறது. அத்தகைய பரிந்துரைகள் அரசுக்கு கிடைக்கும் வரை ஜப்தி போன்ற நடவடிக்கைகளில் அரசு ஈடுபடாது என்பதை ஏற்கெனவே அறிவித்ததோடு மட்டுமல்லாமல் இப்போதும் வலியுறுத்துகிறோம்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1979 மார்ச் 9

மின் கட்டணம் சம்பந்தமான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டது என்றாலும், மின் கட்டணத்தை செலுத்த விரும்பும் விவசாயி களுக்கு ஒரே நேரத்தில் 2, 3 ஆண்டுகால நிலுவைத் தொகையை கட்டுவது கடினமாக இருக்கும்; ஆகவே அது எளிதாக்கப்பட வேண்டும் என்று நேற்று நடைபெற்ற கூட்டத்தில் பல்வேறு தரப்பிலிருந்து எடுத்துச் சொல்லப்பட்ட காரணத்தால் அரசு அத்தகைய கருத்துக்களுக்கு நன்மதிப்பளித்து கீழ்க்கண்ட சலுகை களை அறிவிக்க முடிவெடுத்துள்ளது.

நிலுவைத் தொகைகளைத் தரவில்லை என்ற காரணத்துக் காக மின் துண்டிப்பு பற்றிய அறிவிப்பு பெற்றவர்கள், அறிவிப்பு பெற்றவுடன் கடைசியாகப் பெற்ற மாதாந்திர பில் தொகையை மட்டும் உடனடியாகச் செலுத்தினால் மின்சாரம் துண்டிக்கப்பட மாட்டாது. அவர்கள் நிலுவைத் தொகையை உடனடியாகச் செலுத்த வேண்டியதில்லை. மேலும் மின் துண்டிப்பு அறிவிப்பு பெறாதவர்களும் கடைசியாகப் பெற்ற மாதாந்திர பில் தொகையை உடனடியாகச் செலுத்தினால், அவர்களும் நிலு வைத் தொகையை உடனடியாகச் செலுத்த வேண்டியதில்லை.

மேற்கூறியவர்கள் அடுத்தமாதம், அதாவது ஏப்ரல் முதல் அந்தந்த மாத நடப்புத் தொகையையும் பழைய பாக்கியில் ஆரம்பத்திலிருந்து ஒவ்வொரு மாதத் தொகையையும் செலுத்தி வரவேண்டும். (1+1)

இவ்வாறு செலுத்த முன்வருபவர்களுக்கு 31—3—1979 வரையிலான நிலுவைக் கட்டணங்களுக்கு வட்டி முழுவதும் தள்ளுபடி செய்யப்படும்.

சென்ற சில நாட்களில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு, இன்னும் மின் இணைப்பு மறுபடியும் பெறாதவர்கள், உடனடி யாக கடைசியாகப் பெற்ற மாதாந்திர பில் தொகையையும் மறு இணைப்புக்கான கட்டணத்தையும் செலுத்தினால், மின் இணைப்பு தரப்படும். அவர்களும் ஏப்ரல் மாத முதல் ஒரு மாத நடப்புத் தொகையையும், ஆரம்பத்திலிருந்து ஒவ்வொரு மாத நிலுவையையும் செலுத்தி வரவேண்டும். இவர்களுக்கும் 31—3—1979 வரையிலான நிலுவைக் கட்டண வட்டி தள்ளுபடி செய்யப்படும்.

மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு, பாக்கிகளை முற்றிலும் செலுத்தி மீண்டும் மின் இணைப்பு பெற்றவர்களுக்கும், நிலுவைக் கட்டணங்களுக்கான வட்டி முற்றிலும் தள்ளுபடி செய்யப்படும்.

இந்தச் சலுகைகளை பயன்படுத்திக் கொண்டு, கட்டணங் களைச் செலுத்தாதவர்களுக்கு மின் இணைப்பு துண்டிக்கப்படுவ துடன், மின் இணைப்பு மீண்டும் பெறுவதற்கு நிலுவைத் தொகை கள், நிலுவைக்கான முழுவட்டி, மறு இணைப்புக் கட்டணம் ஆகியவற்றை ஒட்டு மொத்தமாகக் கட்டிய பிறகே மின் இணைப்பு தரப்படும்.

1979 மார்ச் 9] [திரு. ச. இராமச்சந்திரன்]

முன்பு தீவிர ஆலோசனைக்குப் பிறகு முடிவு எடுத்த பிறகும், எதிர்கட்சித் தலைவர்களும், விவசாயிகள் சங்கத் தலைவர்களும் விடுத்த வேண்டுகோளின்படி மீண்டும் ஆராய்ந்து சலுகை தந்து, அரசு இப்போது எடுத்துள்ள முடிவுகளை மன்ற உறுப்பினர்கள் வரவேற்பர் என நம்புகிறேன். வேளாண்மை உற்பத்திக்குத் தேவையான மின்வழங்கு திட்டங்களை விரைந்து நிறைவேற்றவும் தட்டின்றி மின்வழங்க ஏற்ற வசதிகளை உருவாக்கவும் மின்வாரியத்திற்கு ஒத்துழைப்பு தந்து இதுவரை மின் கட்டணம் செலுத்தாத விவசாயிகள் அனைவரும் மின்கட்டணங்களை விரைந்து செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

[பிற்பகல் 1—30]

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இப்பொழுது அறிவித்தது, நேற்று நாம் சர்வ கட்சித் தலைவர்களும், விவசாய சங்கத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளும் பேசும்போது நாம் எல்லோரும் சேர்ந்து சொன்னதற்கு மாறாக இருக்கிறது. இது தமிழகத்திலே இருக்கிற விவசாயிகள் மத்தியிலே இன்றைக்கு இருக்கிற பதட்ட நிலையை போக்குவதற்கு பதிலாக அதிகமான பதட்ட நிலையை ஏற்படுத்தும் என்று நான் நினைக்கிறேன். காரணம் நேற்று சொல்லும்போது உயர் மட்டக் குழு அது தனது அறிக்கையை கொடுக்கும் வரை பழைய நிலை நீடிக்க வேண்டும் என்று சர்வகட்சி தலைவர்களும் சொன்னார்கள் அதற்கு நேர் மாறாக இந்த அறிக்கை இருக்கிறது. இது நேற்று நாம் பேசியதற்கும், எல்லா அனைத்துக் கட்சித் தலைவர்களும் சொன்னதற்கும் மாறாக இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## (8) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

114. சென்னையிலுள்ள திருவாரூர் (பியாட்டிடியூட்ஸ்) சமூக நல நிலையத்திற்குச் சொந்தமான TMZ-4478, MSX-5669, TMX-6713, TMY-2027, TMC-7323 ஆகிய வண்டிகளுக்கான வரி வீதத்தைக் குறைப்பது குறித்து உள் துறையின் (போக்குவரத்து-1) 29—12—1978 ஆம் தேதியிடப்பெற்ற 3203 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].